**செய்தி வெளியீடு : 42** **நாள்: 13.09.2024**

# ஆளுநர் மாளிகை, தமிழ்நாடு - பத்திரிகை செய்தி

## மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உயர்கல்வியில் சிறப்புறுவது குறித்த செவ்வரங்கம் மற்றும் தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு - 2024 தரவரிசையில் தமிழ்நாட்டில் சிறந்து விளங்கும் கல்வி நிறுவனங்களை பாராட்டி சென்னை ராஜ் பவனில் இன்று (13.09.2024) நடைபெற்ற நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்தும் திட்டம் மற்றும் முன்முயற்சியின் ஒரு அங்கமாக, சென்னை ஆளுநர் மாளிகை பாரதியார் மண்டபத்தில் இன்று (13.09.2024) தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக உயர்கல்வியில் சிறப்புறுவது குறித்த செவ்வரங்கத்தை நடத்தி தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு (என்ஐஆர்எஃப்) - 2024 தரவரிசையில் தமிழ்நாட்டில் சிறந்து விளங்கும் கல்வி நிறுவனங்களை பாராட்டியது. 2022ம் ஆண்டில் உருவான இந்த மாநாட்டுச் சிந்தனை உயர் கல்வி நிறுவனங்களை பரஸ்பர ஒத்துழைப்புக்காக ஊக்குவிக்கவும், கல்வி, ஆராய்ச்சித்தரம் உள்ளிட்டவற்றில் உதவித்தொகையை அதிகரிக்கும் நோக்கிலும் உருவாக்கப்பட்டது.

இந்த மாநாட்டில், உயர் சாதனை படைத்த கல்வி நிறுவனங்கள் தங்களின் முன்முயற்சிகள் மற்றும் வழிமுறைகளின் அடிப்படையில் அவற்றின் அனுபவத்தை பகிர்ந்து கொள்வதால் அவை சிறந்து விளங்க உதவுகிறது. இத்தகைய அனுபவப் பகிர்விலிருந்து பிற நிறுவனங்கள் - மாநில பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் பயனடைந்து சிறப்புறுவதற்கு பாடுபடும். இந்த நடவடிக்கையில் ஐஐடி சென்னை தேவையான வளங்களை வழங்குவதில் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றி வருகிறது. இவை அனைத்தும் நமது மாநிலத்தில் உள்ள உயர்கல்வி நிறுவனங்கள் தரவரிசையில் நிலையான முன்னேற்றத்தை எட்ட காரணமாகியுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள், இன்றைய மாநாட்டுக்கு தலைமை தாங்கி, என்ஐஆர்எஃப் - 2024ல் பல்வேறு பிரிவுகளில் முதல் 20 இடங்களுக்குள் தரவரிசையில் இடம்பிடித்த அனைத்து கல்வி நிறுவனங்களின் துணை வேந்தர்கள் மற்றும் முதல்வர்கள் அவர்களின் சிறப்பான செயல்பாட்டுக்காகப் பாராட்டினார். என்ஐஆர்எஃப் - 2024ல் உள்ள சிறந்த தரவரிசை கல்வி நிறுவனங்கள், பயிற்றுவித்தல் மற்றும் கற்றல், ஆசிரியர் மேம்பாடு, உள்கட்டமைப்பு வளர்ச்சி, ஆராய்ச்சி மேம்பாடு போன்றவற்றில் தங்கள் புதுமையான அணுகுமுறைகளை மையமாகக் கொண்ட செயல் விளக்கத்தை காண்பித்தன. அவற்றின் அனுபவங்கள், எதிர்கால தரவரிசையில் பிற நிறுவனங்கள் இடம்பெறவும் அவற்றின் செயல்திறனை மேம்படுத்திக் கொள்ளவும் மதிப்புமிக்க ஆழமான ஞானத்தை வழங்கின.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தனது தலைமை உரையில், கல்வியில் சிறந்து விளங்குதல், புதுமை கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சி மேம்பாடு ஆகியவற்றில் சிறந்து விளங்கும் சாதனையாளர்களின் அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாட்டைப் பாராட்டினார். இந்த மாநாடு உயர் சாதனையாளர்களை கௌரவிப்பதற்கும் பாராட்டுவதற்காக மட்டும் ஏற்பாடு செய்யப்படவில்லை என்றும் உயர் சாதனை படைத்த நிறுவனங்கள் தங்களின் ஆழமான சிந்தனை, உத்திகள் மற்றும் சிறந்த நடைமுறை அனுபவ அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு இணக்கமான தளத்தை வழங்கும் நோக்கிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஆளுநர் கூறினார்.

நமது மாநிலத்தின் உயர்கல்வி தரத்தை மேம்படுத்துவதில் உறுதியாக இருக்கும் மாண்புமிகு ஆளுநர்-வேந்தர் அவர்கள், ஆய்வறிஞர்கள் மற்றும் முதுகலை மாணவர்கள் நெட் / ஜேஆர்எஃப் தேர்வில் போட்டியிடவும், பல்கலைக்கழகங்களால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிப் பணிகளின் தரம் மற்றும் தரநிலையை மேம்படுத்துவதற்கும் ஏதுவாக மாணவர்களின் ஆராய்ச்சிக்கு தேவையான வழிகாட்டுதல், ஊக்கம் மற்றும் நம்பிக்கையூட்டும் ஆசானாக விளங்க, மாநில பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை

ஊக்குவித்து வருகிறார். மாண்புமிகு ஆளுநர்-வேந்தர் அவர்களின் வழக்கமான மறுஆய்வு நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பின் விளைவாக பல்கலைக்கழக செயல்திறன்கள் பல்வேறு வகையில் மேம்பட்டு, மாநில பல்கலைக்கழகங்கள் பெற்ற காப்புரிமைகளின் எண்ணிக்கை கடந்த மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

மாநில மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் வருடாந்திர இரண்டு நாட்கள் துணை வேந்தர்கள் மாநாடு நமது மாநிலத்தில் உயர்கல்வியின் கூட்டுச் சூழல் அமைப்புக்கு வழிவகுத்தது. என்ஐஆர்எஃப் தரவரிசையில் தமிழ்நாட்டில் முதல் 20 இடங்களில் உள்ள கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை 2022-ல் 20 ஆக இருந்து 2024-ல் 28 ஆக உயர்ந்துள்ளது. இது மேலே குறிப்பிடப்பட்ட கூட்டு முயற்சிகளின் நேரடி விளைவாகும். இத்துடன் மேலும் பல கல்வி நிறுவனங்களின் தரவரிசையிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

நமது தேசத்தை உலகளாவிய அறிவுசார் மையமாக மாற்றுவதற்கு அடிப்படையான பரஸ்பர கற்றல், அறிவைப் பகிர்தல் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கிடையில் ஆரோக்கியமான போட்டியை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் தரம் சார்ந்த உயர்கல்வி சூழலை மேம்படுத்தும் நோக்கத்தை நிறைவேற்றுவதில் இந்த மாநாடு வெற்றி கண்டுள்ளது என்றும் ஆளுநர் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

திரு. ஆர். கிர்லோஷ் குமார், ஐ.ஏ.எஸ்., மாண்புமிகு ஆளுநரின் செயலாளர், பேராசிரியர் முனைவர் வி.காமகோடி, இயக்குநர், ஐஐடி சென்னை, பல்வேறு மாநில மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள், பதிவாளர்கள், தலைவர்கள் மற்றும் மாநிலம் முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள் மற்றும் அதிகாரிகள் இந்த மாநாடு மற்றும் பாராட்டு விழாவில் கலந்து கொண்டனர்.

---

**ஆளுநர் மாளிகை, சென்னை-22** **வெளியீடு/-xx**

**நாள்: 13.09.2024** **மக்கள் தொடர்பு அலுவலகம்**